### ‘உயர்கல்வித்துறை பங்களிப்போர் கலந்தாய்வுக் கூட்டங்கள்’ போன்ற ‘திராவிட மாடல்’ அரசின் முன்னோடித் திட்டங்களால்

# உயர் கல்வியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது!

## திருச்சியில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் – உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பெருமிதம்!

**திருச்சி, நவ.13–**

**உயர்கல்வியின் வளர்ச்சிக்கு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் அதனை மேலும் வளர்த்திட வேண்டிய விதம் குறித்தும் நடைபெற்ற பங்களிப்போர் கலந்தாய்வுக் கூட்டத்தில் உரையாற்றிய உயர் கல்வித் துறை அமைச்சர் – முனைவர் கோவி. செழியன், “உயர் கல்வித்துறை பங்களிப்போர் கலந்தாய்வுக் கூட்டம் – போன்ற, திராவிட மாடல் அரசின் முன்னோடித் திட்டங்களால் உயர்கல்வித்துறையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது” என்று குறிப்பிட்டார்.**

இக்கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்ததாவது:

பங்களிப்போர் கூட்டத்தின் முக்கியக் குறிக்கோள் அரசுக்கும். பங்களிப்போருக்கும் உள்ள இடைவெளியை குறைத்து, அரசின் திட்டங்கள், பங்களிப்போர் அனைவருக்கும் நல்ல முறையில் சென்று அடைவதற்கு உண்டான ஒரு இணைப்புப் பாலத்தை ஏற்படுத்துவது தான். அரசின் திட்டங்கள் என்னென்ன? அவைகள் பங்களிப்போரை நல்ல முறையில் சென்று சேருகின்றதா? என்பதை அறியவும், குறை, நிறைகளை அறிந்து நிவர்த்தி செய்வதற்காகவும் உயர்கல்வித் துறை சார்பில் பங்களிப்போர் கூட்டம் இன்று நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு அரசின் முக்கியமான குறிக்கோள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும், அனைத்துத் திறனும் சென்று அடைய வேண்டும் என்பதுதான். இதற்காக அரசு பல நல்ல சிறப்பான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டங்கள் நல்ல முறையில் செயல்பட வேண்டுமானால் தமிழ்நாடு அரசும், கல்லூரி நிர்வாகமும், ஆசிரியர் பெருமக்களும், பெற்றோர்களும், மாணவச் சமூகமும் இணைந்து செயல்பட வேண்டும். அப்போதுதான் அனைத்துத் திட்டங்களும் நல்ல முறையில் பயனாளிகளைச் சென்றடையும். அதற்காக பங்களிப்போருடன் கலந்து உரையாடி குறை, நிறைகளைத் தெரிந்து கொள்வது தான் இந்தக் கூட்டத்தின் நோக்கமாக உள்ளது.

அரசின் நிர்வாகம் மக்களைத் தேடிச் சென்று அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும் என முதல்வர் அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் அரசு, பங்களிப்போரை நேரில் சந்தித்து அவர்களுடன் கலந்து உரையாட வேண்டும் என்பது குறிக்கோள். மேலும் மாணவர்கள், பெற்றோர்கள், தொழில் நிறுவனங்கள், ஆசிரியர்கள் அவர்களுடைய தேவை என்ன? என்பதையும் நிர்வாகத்தை மேலும் திறன்பட நடத்துவதற்கு அவர்களுடைய ஆலோசனைகளையும் கேட்டு அதன்படி நிர்வாகம் செய்ய வேண்டும் என்பதும் முதல்வருடைய ஆணையாகும். அதனைச் செயல்படுத்த இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசின் திட்டங்கள் நல்ல முறையில் செயல்படுகின்றனவா? என்பதை அறிந்து கொள்வதற்கும் இது ஒரு நல்ல வாய்ப்பாகும்.

**களப்பணிகள்!**

நல்ல நிர்வாகம் என்பது களப்பணிகளில் நேரடியாக மக்களிடம் செல்வது என்பதாகும். அமைச்சர்கள், உயர் அலுவலர்கள் எல்லோரும் பங்கேற்று பயனாளிகளிடம் நேரடியாகத் தொடர்பு கொள்வது தான். முடிவில் அரசின் திட்டங்கள் குறித்து ஒரு தெளிவான எண்ணம் அனைவருக்கும் ஏற்பட்டிருக்க வேண்டும். அரசுக்கும். நிர்வாகத்திற்கும் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கும் இடையே ஒரு இணக்கமான நல்லுறவு ஏற்பட வேண்டும். அரசு எப்போதும் மாணவர்களுக்காகவும். கல்லூரி நிர்வாகத்திற்காகவும். பெற்றோர்களுக்காகவும் உதவி செய்யத் தயாராக இருக்கிறது என்ற எண்ணம் ஏற்பட வேண்டும் என்பவை இந்தக் கூட்டத்தின் முடிவில் ஏற்படும் நன்மைகள் ஆகும்.

இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் அரசு உதவி கல்லூரிகள் மற்றும் சுயநிதி கல்லூரி நிர்வாகத்தினர், ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள், தொழில் நிறுவனத்தினர், மாணாக்கர்கள், பெற்றோர்கள், 7.5 சதவீத இட ஒதுக்கிட்டில் சேர்க்கைப்பெற்ற மாணாக்கர்கள், மாற்றுத்திறனாளிகள், நான் முதல்வன். புதுமைப்பெண் தமிழ்ப்புதல்வன், போன்ற முதலமைச்சரின் முத்தான



திட்டங்களினால் பயன்பெற்ற மாணாக்கர்கள் கலந்து கொண்டு தங்களது அரிய கருத்துக்களை எடுத்துரைத்தனர். இதில் பல மாணாக்கர்கள் மேற்படி திட்டங்களின் மூலம் தான் தாங்கள் உயர் கல்வி வாய்ப்பைப் பெற முடிந்தது என்று உள்ள நேகிழ்வுடன் தெரிவித்தது டன் மேற்படித் திட்டங்களை தங்களுக்கு அளித்த முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சான நன்றியினைத் தெரியப்படுத்தியது மிகவும் நெகிழ்ச்சி அடைந்த தருணமாக இருந்தது. மேலும் மாணாக்கர்கள் இந்தத் திட்டங்கள் இன்னும் பல கிராமப்புற மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் சென்றடையவில்லை, இதனை அவர்களும் பயன்படுத்திக் கொண்டு தங்கள் வாழ்வில் முன்னேற்றம் அடைய உயர்கல்வித் துறை சார்பாக உரிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும்.

**முதல்வரின் தாயுள்ளம்!**

இந்த 7.5 சதவீத இட ஒதுக்கீடு என்பது நீட் தேர்வினால் நமது கிராமப்புற மாணவர்கள் தங்களது உயர் கல்வியினைப் பெற இயலாத நிலையினைக் கருத்தில் கொண்டு முந்தைய அரசால் மருத்துவ மாணவர்களுக்கு மட்டும் 7.5 சதவீத இட ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டது. இதனால் இட ஒதுக்கீடு பெற்ற ஒரு மாணவி இந்த இட ஒதுக்கீட்டினால் படிக்க இடம் கிடைத்தும் போதிய வசதி இல்லாததால் மருத்துவப் படிப்பைத் தொடர இயலவில்லை எனத் தெரிவித்தபோது அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரும் தற்போதைய முதல்வரும் ஆன நமது முதலமைச்சர் இதனைக் கனிவுடன் கேட்டுக் கொண்டு அப்போதே அந்த மாணவிக்கு முழு கல்விச் செலவையும் தானே ஏற்றுக்கொள்வதாக அறிவித்தார்கள். பின்னர் ஆட்சிக்கு வந்தவுடன் மருத்துவப் படிப்பு மட்டுமல்லாமல் பள்ளிப்படிப்பு முடிந்து தொழில் கல்வியில் பொறியியல், விவசாயம், சட்டம் உள்ளிட்ட அனைத்திலும் 7.5 சதவீத இட ஒதுக்கீட்டினைக் கொண்டு வந்ததுடன் இந்த இட ஒதுக்கீட்டின் கீழ் உயர் கல்வியில் சேர்க்கைப்பெறும் மாணவர்களுக்குக் கல்வி கட்டணம், விடுதிக் கட்டணம், பேருந்துக் கட்டணம், உள்ளிட்ட அனைத்துக் கட்டணங்களையும் அரசே ஏற்கும் என அறிவித்து அதற்காக பொறியியல் கல்விக்கு மட்டும் 213 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இது மாணவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் தாய்உள்ளத்தோடு செய்துள்ள ஒரு மிகப்பெரிய திட்டமாகும்.

‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் இதுவரை 27 இலட்சம் மாணாக்கர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 1 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் தற்போது முக்கிய நிறுவனங்களில் பணி வாய்ப்பு பெற்று பணிபுரிந்து வருகின்றனர். ‘புதுமைப்பெண்’ திட்டத்தின் கீழ் சுமார் 7 இலட்சம் மாணவிகள் பயனடைந்து வருகின்றனர். அதேபோல் இவ்வாண்டு தொடங்கப்பட்ட ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டத்தின் கீழ் சுமார் 2 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்ற தேர்வாணையங்களால் நடத்தப்படும் தேர்வுகளுக்கு மாணவர்களைத் தயார் செய்ய துணை முதலமைச்சர் அவர்களால் போட்டித்தேர்வு பயிற்சி மையம் மதுரையில் தொடங்கப்பட்டுள்ளது. அதேபோல் மற்ற இடங்களிலும் தொடங்கப்படவுள்ளது. இதனை மாணாக்கர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

**கலந்துரையாடல்!**

இன்றைய கூட்டத்தில் தொழில் முனைவோர், நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் போன்ற அனைவரின் கருத்துக்களும் கேட்கப்பட்டன. மேலும் ‘நான் முதல்வன்’ பயனாளிகளுடனும், 7.5 சதவீத அரசின் ஒதுக்கீடு பெற்ற மாணவர்களுடனும் ‘தமிழ்ப் புதல்வன்’, ‘புதுமைப்பெண்’ பயனாளிகளுடனும் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்ட அரிய பல கருத்துக்கள் பயனுள்ளதாக அமைந்தன. இவைகள் சேகரிக்கப்பட்டு பதிவு செய்ப்பட்டுள்ளது. மேற்படிக் கருத்துக்கள் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு தேவைக்கேற்ப மாணவர்களுக்கு பயனுள்ள திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

மாற்றுத்திறனாளிகளுடனான கலந்தாய்வில் தெரிவித்துள்ள கோரிக்கைகளை முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்று அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடைபெற்றது போன்றே மதுரை, கோவை மற்றும் சென்னை ஆகிய மண்டலங்களிலும் கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இப்படியான பல்வேறு திட்டங்களினால் உயர்கல்வியின் தரத்தில் இந்தியாவிலே தமிழ்நாடு முதன்மை மாநில மாகத் திகழ்கிறது.

இவ்வாறு உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் உயர்கல்வித் துறை அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் கோபால், கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி. சுந்தரவல்லி, தொழில் நுட்ப கல்வி ஆணையர் ஆப்ரஹாம், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார் மற்றும் உயர்கல்வி மன்றத்தின் துணைத்தலைவர் விஜயகுமார் மற்றும் உயர்கல்வித்துறையின் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.



கழகத் தலைவர் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவித்தலின்படி காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின்படி மதுராந்தகம் தொகுதி அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியம் BLA2 பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன் அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஜீ.தம்பு, தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர். நாராயணன், அவைத் தலைவர் ஜி.சிவபெருமாள், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் எஸ்.கலியுக கண்ணதாசன் ஆலோசனை வழங்கினர். அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


